IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 35/2016

Deposition of Witness : PW 1

Name : மூர்த்தி (வயது – 71)

Father's Name /W/o : த/பெ சுப்பிரமணி

Calling : –

Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 01.08.2026.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. 14.07.1997 ஆம் ஆண்டில் வா.சா.ஆ – 3 படி வழக்கு சொத்து வாசுகி, அனுசுயா, போலச்சியம்மாள் மற்றும் குணம்மாளிடமிருந்து கிரையம் பெற்றதாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். முதல் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.373/1991 இல் நான், 2 ஆம் வாதி மற்றும் மேற்படி எனக்கு கிரையம் கொடுத்த வாசுகி, அனுசுயா, போலாச்சியம்மாள் மற்றும் குணம்மாளை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளார் என்றால் தெரியாது.

2. மேற்படி வழக்கின் விபரத்தை பிரதிவாதி அவர் பதிலுரையில் தெரிவித்துள்ளார் என்றாலும் நான் என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ – 3 நான் கிரையம் பெற்றுள்ள போது அவர்களுக்கு சொத்து எவ்வாறு வந்தது என்பதற்கு அவர்கள் பெயரில் பத்திரம் இல்லை என்றால் 1980 ஆம் ஆண்டிற்கான ஆவணம் உள்ளது. மேற்படி 1980 ஆம் ஆண்டு ஆவணம் யார் யார் பெயருக்கு எழுதி வைத்தது என்றால் போலாச்சியம்மாளின் பெற்றோர்கள் போலாச்சியம்மாளுக்கு எழுதி கொடுத்தார்கள். 1980 ஆம் ஆண்டு ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். அவர்கள்

தாக்கல் செய்திருப்பார்கள்.

3. மேற்படி 1980 ஆம் ஆண்டு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் போலாச்சியம்மாள் பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ –3 இல் போலாச்சியம்மாளின் பெற்றோர் அவர்களுக்கு கிரையம் எழுதி கொடுத்த சொத்தை என் பெயரில் எழுதி கொடுத்ததாக வாசகம் உள்ளதா என்றால் இல்லை. பட்டா படி எனக்கு விற்றவர்களுக்கு உரிமை உள்ளது என்று வா.சா.ஆ –3 பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ – 3 தயார் செய்த ஆவணம் என்றாலும் அசல் வழக்கு எண்.373/1991 வழக்கில் வா.சா.ஆ – 3 சொத்து குறித்து தீர்ப்பு எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு எனக்கு காலதாமதமாக தெரியும்.

4. வா.சா.ஆ – 7 05.12.1984 தேதியிட்ட போலாச்சியம்மாள் பெயரில் உள்ள உயில் சாசனம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். வா.சா.ஆ – 7 அசல் உயில் சாசனத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ – 7 உயில் பத்திரம் இந்த வழக்கில் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் போலாச்சியம்மாளுக்கு வழக்கு சொத்து எவ்வாறு சொந்தமானது என்பதை நிரூபிக்க தாக்கல் செய்துள்ளேன். தாவா சர்வே எண்ணில் 315/1 இல் ஒரு பகுதிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ – 7 ஆவணத்தில் சர்வே எண்.312/1 தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும் தாவா சர்வே எண்.315/1 குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பழைய ஆவணம் என்பதால் மாற்றி எழுதியுள்ளார்கள். வா.சா.ஆ – 3 கிரைய ஆவணத்தில் வா.சா.ஆ – 7 உயில் முன்னிலைக்கு கிரையம் பெற்றேன் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ – 2 17.12.1984 தேதியிட்ட எதிரிடை கடிதம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் போலாச்சியம்மாளின் பெற்றோர் அவரது மகன்களுக்கு எழுதி கொடுத்த

எதிரிடை கடிதம்.

6. வா.சா.ஆ – 2 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ – 2 ஆவணம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ – 2 ஆவணத்தில் வழக்கு சொத்து சர்வே எண்.315/1,டவுன் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ – 2, வா.சா.ஆ – 7 சமபந்தப்பட்ட நபர்களை விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றால் அவர்கள் உயிருடன் இல்லை என்பதால் விசாரிக்க முடியாது. மேற்படி ஆவணங்கள் சம்பந்தப்பட்ட நபர் இறந்துவிட்டார்கள் என்பதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. வா.சா.ஆ – 2 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் சட்டப்படி ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ – 1 பாகப்பிரிவினை ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பேலாச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை நிரூபிக்க தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ – 1 அசல் பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ –1, வா.சா.ஆ –2 மற்றும் வா.சா.ஆ –7 ஆவணங்கள் குறித்து தாவாவில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

8. எனக்கு வழக்கு சொத்தை விற்பனை செய்த நபர்கள் தாவா சொத்தை அனுபவித்ததை குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாவாவில் 1 ஆம் பிரதிவாதி வாடகைதாரர் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி யாரிடம் வாடகைதாரராக இருந்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.373/1991 வழக்கில் ஜெயராமபிள்ளை மகன் சுப்பிரமணி மற்றும் 1 ஆம் பிரதிவாதி எனக்கு எதிராக மற்றும் எனக்கு சொத்தை விற்றவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார்

என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் தீர்ப்பாணையில் மேற்படி சுப்பிரமணி என் மீது மற்றும் எனக்கு விற்றவர்களுக்கு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் தெரியாது. 1 ஆம் பிரதிவாதி வாடகையில் இல்லை என்றாலும் வழக்ககிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி வாடகைதாராக இருந்திருந்தால் அதற்கான ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.373/1991 வழக்கு நிலுவையில் இருந்தபோது வா.சா.ஆ – 3 பத்திரம் தயார் செய்தது என்றால் சரியல்ல.

9. அசல் வழக்கு எண்.373/1991 வழக்கு பற்றி தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் மற்றும் மேற்படி வழக்கில் நான் தரப்பினராக இருந்து வழக்கறிஞரை வைத்து வாதாடினேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி வழக்கின் தீர்ப்பு தாமதமாக தான் தெரியும். அசல் வழக்கு எண்.373/1991 வழக்கில் சொத்து 1 ஆம் பிரதிவாதி அவருடைய சொத்து என்று பதிலுரையில் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. ஜெயராம் பிள்ளை மகன் சுப்பிரமணி மற்றும் 1 ஆம் பிரதிவாதி சேர்த்து தான் மேற்படி வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. சுப்பிரமணி அப்போது உயிருடன் இல்லை.

10. நான் மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்த்த பிறகு வழக்கு சொத்தில் கட்டிடம் கட்டினேன் என்றால் சரிதான். உயர்நீதிமன்றம் W.P.No.29939/2012 உத்தரவில் நான் தாவா சொத்தில் கட்டிடம் கட்ட கூடாது என்று உத்தரவு பிற்பபிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் உயர்நீதிமன்ற உத்தரவு படி கட்டிடம் கட்டினேன். உயர்நீதிமன்றம் எனக்கு கட்டுமானம் கட்டுவதற்கு உத்தரவு கொடுத்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி உயர்நீதிமன்றம் எனக்கு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை என்றாலும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கில் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கு மற்றும் எனக்கு

விற்றவர்களுக்கு உரிமை இல்லை என்று பிரதிவாதிகள் பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

11. 1 ஆம் பிரதிவாதி 06.01.2016 ஆம் தேதியில் என் சொத்தில் என் உரிமையை மறுத்து பதிலுரையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 1 ஆம் பிரதிவாதி என் உரிமையை மறுத்ததை தெரிந்து கொண்டு விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். மேற்படி பரிகாரம் கோரவில்லை என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.373/1991 தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றாலும் அதனை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே போலியான ஆவணங்களை வைத்து பிரதிவாதிகளுக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

12. நான் தாவாவில் தெரிவித்துள்ள செக்பந்தி தவறு என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.373/1991 வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் சொத்தை அளந்து அறிக்கை விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை எனக்கு தெரிந்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வீட்டு வரி ரசீது மற்றும் குடும்ப அட்டை இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் குடிசை வீட்டை இடித்து கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சியிலிருந்து கட்டுமான அனுமதி வாங்கினேனா என்றால் வாங்கினேன். மேற்படி கட்டுமான அனுமதியை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

13. நான் தாவா சொத்தில் கட்டிய கட்டுமானம் சட்ட விரோதமானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குறித்து இன்றைய தேதிவரை என் பெயரிலோ அல்லது பட்டா இல்லை என்றால் சரிதான். நான் எழுதி கொடுத்துள்ளேன். நான் வா.சா.ஆ – 3 ஆவணத்தை தயார் செய்து பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. நான் 36 வருடமாக அனுபவித்து வருகிறேன். நகராட்சியில் நான் கட்டிய குடிநீர் வரி வீட்டு வரி கட்டியதை வைத்து உரிமை கோருகிறேனா என்றால் பத்திரமும் உள்ளது. என்னிடம் உள்ள பத்திரம் போலியானது என்றாலும் நான் நகராட்சியில் வீட்டு வரி மற்றும் குழாய் வரி கட்டுவதை வைத்து உரிமை கோருவது பொய்யானது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை அலைக்கடிக்க வேண்டும் என்பதால் அவர்கள் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.